மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

அசல் வழக்கு எண்.135/2016

வாக்குமூலம். வா.சா.4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரெங்கசாமி | ஜாதி | |
| த/பெ. | ஜம்புலிங்கம் | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 61/2023 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 23.08.2023-ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வாதி எழுதி கொடுத்ததாக சொல்லப்படும் கிரைய பத்திரம் தற்போது யாரிடம் இருக்கிறது என்பது எனக்கு தெரியாது. வாதியிடம் மேற்படி கிரைய பத்திரம் அசல் யாரிடம் இருக்கிறது என்று நான் கேட்டதில்லை என்றால் சரிதான். கடன் பத்திரம் மற்றும் கிரைய பத்திரத்திற்கு உண்டான வித்தியாசம் எனக்கு தெரியாது. ராஜாமணி 2 ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. சொல்ல தெரியும். 1 ம் பிரதிவாதி அசோக்கும் வாதியும் நெருங்கிய அனுபவம் உள்ளவர்கள் என்றால் வாதியின் கணவருக்கு 1 ம் பிரதிவாதி பழக்கம். வாதியின் கையெழுத்து ஆங்கிலத்தில் போடுவார் என்றார் அது பற்றி எனக்கு தெரியாது. வாதியும் அவரது கணவரும் ஒற்றுமையாக தான் இருக்கிறார்கள் என்றால் சரிதான்.

2. வாதியின் கணவர் கையெழுத்து நான் பார்த்ததில்லை. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.2, 3 ஆவணத்தை பற்றி எனக்கு தெரியாது நான் பார்த்ததில்லை. பி.வா.சா.2 பத்திரத்தின் நகலை வாதி என்னிடம் காண்பித்து இருக்கிறாரா என்றால் இல்லை. என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் பாரா எண்.2 ல் இக்கட்டான நிலையில் 1ம் பிரதிவாதி அசோக் கடன் பெற்றதாகவும் அதற்காக 2ம் பிரதிவாதி குருஜலா ஜெயராமையா பிரச்சினை செய்து வருவதாகவும் கடன் தொகைக்கு பாதுகாப்பாக கிரைய ஆவணம் ஏற்படுத்தி கொடுக்க பட்ட விவரம் எனக்கு தெரியும் என்று குறிப்பிட்டு இருக்கிறேன் என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதி ஜெயராமையா எந்த மாநிலத்தை சேர்ந்தவர் என்றால் அவர் ஆந்திரா காரர் என்று வாதி என்னிடம் சொன்னார். நான் ராஜாமணியிடம் 2ம் பிரதிவாதி அசோக்கின் கடன் தீர்ந்துவிட்டதா என்று கேட்டானா என்றால் ராஜாமணி 3 வருடத்திற்கு முன்னால் கடன் தீரவில்லை என்று சொன்னார். நான் நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் பொய்யானது என்றால் ராஜாமணிக்கு வேண்டியவர் என்பதால் பொய் சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**